


# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | செப்டம்பர் 29, 2022 | புரட்சி 21 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00


## நட்டாவின் ஞானக் கண்ணுக்கு மட்டுமே ‘எய்ம்ஸ்’ தெரியும்

பா.ஜ.க.வின் தலைவர் தமிழ் நாட்டிற்கு வந்து, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையின் பணிகள் 95% முடிந்து விட்டது என்று அவர் கூறினார். அது எப்படி நடந்தது? என்று நமக்கே தெரியாமல் என்று வியப்படைந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாணிக்க தாக்கூர், மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி சு.வெங்கடேசன் ஆகியோர் மருத்துவமனை கட்டப்பட்டு வரும் இடத்திற்கு விரைந்து சென்றனர். அங்கே, வெறும் வெட்டவெளிக் காடாகத்தான் இருந்தது. இது மருத்துவமனைக்கான இடம் என்று நடப்பட்டிருந்த பெயர்ப் பலகையும் கூட காணாமல் போய்விட்டது. ஆனால், ஜே.பி. நட்டா 95% பணிகள் நிறைவடைந்துவிட்டது என்று கூறிய வுடன் ஒரு வியப்பாக போய்விட்டது. அதற்கான திருத்தப்பட்ட மறு மதிப்பீட்டு நிதிக்கும், ஒன்றிய அமைச்சரவை இன்னமும் ஒப்புதல் வழங்கவில்லை. டென்டர்களும் கோரவில்லை. ஆனால், மருத்துவமனையில் 95% கட்டப்பட்டு விட்டது என்று கூறினால், இவர் எங்கிருந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்பது தான் வியப்பாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் ஆட்சி நடத்துகிற திமுகவினர், படிக்காதவர்கள், கல்வி யறிவு இல்லாதவர்கள் என்று அவர் பேசி யிருக்கிறார். ஆனால் படித்த ஜே.பி. நட்டாவிற்கு மட்டும் கட்டப்படாத எய்ம்ஸ் மருத்துவமனை 95% கட்டியதாக அவரது “மாயப் புலன்களுக்குத்” தெரிந்திருக்கிறது போலும்.

வடிவேலுடைய நகைச்சுவை காட்சி தான் நினைவுக்கு வருகிறது. “நான் கடவுளைக் காட்டப் போகிறேன் கடவுளைப் பார்க்க ரூ.2000/-” என்று அனைவரிடமும் கல்லா கட்டுவார் வடிவேலு. பணத்தைக் கொடுத்தவர்கள் அனைவரும் கடவுளைப் பார்ப்பதற்காக காத்திருக்கும் போது ஒரு மலையடி வாரத்திற்கு அனைவரையும் அழைப்பார். பெரும் திரளாகக் கூட்டம் அங்கே கூடியிருக்கும். ‘கடவுள் வரப் போகிறார், வரப் போகிறார்’ என்று வடிவேலு அறிவித்துக் கொண்டே இருப்பார். கடவுள் வரமாட்டார். கடவுளைக் காணோமே என்று கூட்டத்தில் சலசலப்பு எழும்; திடீரென்று மலை உச்சியின் மேல், “அதோ பார் தெரிகிறார் கடவுள், உங்களுக்குத் தெரியவில்லையா?” என்று வடிவேலு கேட்பார். ஒன்றும் தெரிய வில்லையே என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கும் போது, திடீரென்று ஒரு வெடியைக் கொளுத்திப் போடுவார், “பத்தினி களுக்குப் பிறந்தவர்களுக்கு மட்டும் தான் கடவுள் தெரிவார்” என்று சொன்னவுடன் அத்தனைக் கூட்டமும், “ஆமாம், ஆமாம் தெரிகிறார் கடவுள், கடவுள் தெரிகிறார்” என்று கூறிவிட்டு, ‘நாம் தெரியாது என்று கூறினால் நம் பிறப்பையே சந்தேகப்பட்டு விடுவார்கள் நமக்கு ஏன் வம்பு’ என்று கூறிவிட்டு கூட்டம் கலைந்து போய்விடும்.

தமிழ்நாட்டில் கல்வி கற்காதவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிற நட்டாவினுடைய அறிவாளி ஞானி கண்களுக்கு மட்டும் தான் வெற்று மைதானத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை இருப்பது தெரியும் போல. இப்படி எல்லாம் கேவலமான அரசியல் நடத்தும் நிலைக்கு ‘சனாதனம்’ வந்து நிற்கிறது.

## கொட்டும் மழையில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

# “இந்து”ப் பெண்களை இழிவுபடுத்தும் மனுசாஸ்திரத்தை தடை செய்

“இந்து”ப் பெண்களை இழிவுபடுத்தும் மனு சாஸ்திரத்தை தடை செய் என்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சென்னையில் கொட்டும் மழையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெரியார் இறுதி உரை நிகழ்த்திய தியாகராயர் நகர் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள பெரியார் சிலை முன்பு 26.09.2022 அன்று மாலை 3.30 மணியளவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் பெருமளவில் பங்கேற்று ஆர்ப்பாட்டத்தை வழி நடத்தினர். பேராசிரியர் சரசுவதி ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினார். ‘உங்களை எல்லாம் சூத்திரர்களாக விட்டு விட்டு சாகப் போகிறேனே’ என்று பெரியார் தனது இறுதி உரையில் சமூகக் கவலையோடு பேசிய இடத்தில் ‘சூத்திரர்களாக்கும்’ மனு தர்ம நூலை சுக்குநூறாகக் கிழித்தெறிந்து பெரியாரியப் பெண்கள் ஆர்ப்பரித்தனர். வடசென்னை, தென்சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்று உணர்ச்சி முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டம் தொடங்கியவுடன் கடும் மழை கொட்டத் தொடங்கிவிட்டது. கொட்டும் மழையில் கழகப் பெண்கள் தோழர்கள் மனு சாஸ்திரத்துக்கு எதிராக முழக்கமிட்ட காட்சி, உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, தலைவர் வேழவேந்தன், மயிலைப் பகுதி பொறுப்பாளர் சுகுமார், வடசென்னை மாவட்டத்தலைவர் ஏசுகுமார் மற்றும் தட்சிணாமூர்த்தி, தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்களும் தமிழ்நாடு மாணவர் கழகம், ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத் தோழர்களும், மக்கள் அதிகாரம் அமைப்பின் பெண் தோழரும், பெரியாரிய அம்பேத்கரிய, மார்க்சிய சிந்தனையாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.




ஆர்ப்பாட்டத்தில்.....

ஆ. ராசாவுக்கு பெண்கள் துணை நிற்போம்!

குற்றம் என்ன? குற்றம் என்ன?<br>ஆ. ராசா செய்த குற்றம் என்ன?

ஆதரிப்போம்; ஆதரிப்போம்;<br>ஆ. ராசாவின் கருத்துகளை ஆதரிப்போம்!

துணை நிற்போம்; துணை நிற்போம்;<br>ஆ. ராசாவுக்கு துணை நிற்போம்!

– என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்துக்கு தலைமையேற்ற பேராசிரியர் சரசுவதி, மனுசாஸ்திரம் பெண்களை இழிவுபடுத்தியதை விளக்கிப் பேசினார். கழக செயல்பாட்டாளர் இரண்யா மனுசாஸ்திரத்துக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினார். கொட்டும் மழையிலும் பொது மக்கள் ஆங்காங்கே மழைக்கு ஒதுங்கி நின்று ஆர்ப்பாட்டத்தையும் முழக்கங்களையும் கேட்டனர். இந்துப் பெண்களை இழிவுபடுத்தும் மனுதர்ம சுலோகங்களடங்கிய துண்டறிக்கைகள் மக்களிடம் வழங்கப்பட்டன.

## ஆதிசங்கரரும் விவேகானந்தரும் ஏன் பூணூல் போடவில்லை?

வேதங்களும், ஆகமங்களும் பார்ப்பனரல்லாத மக்களை சூத்திர்களாக இழிவுபடுத்துகிறது என்று ஆ. இராசா கூறியதற்கு, எதிர்ப்பத் தெரிவித்து இந்து முன்னணியினரும்,சங்கிகளும் பொங்கி எழுகிறார்கள்.இந்துக்களை புண்படுத்தி விட்டதாக கூக்குரல் இடுகிறார்கள். உண்மையிலேயே இந்துக்களை இழிவுபடுத்துவது ஆகமங்களும் வேதங்களும் தான்.ஆங்காங்கே ஆ.இராசாவின் உருவ பொம்மைகளை எரிக்க கிளம்பியிருக்கிற கூட்டத்தைப் பார்த்து நாம் கேட்க வேண்டிய ஒரே கேள்வி, இதை எதிர்த்த ஆதிசங்கரரைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

இந்து மதத்தினுடைய கர்த்தாக்களில் ஒருவரான ஆதிசங்கரர் அத்வைதத்தை வலியுறுத்தியவர்.அவர் சொல்கிறார், “ஆகமங்கள் பொய்களின் திரட்டு. பொய்களை வைத்து கடவுள் என்ற உண்மையை பூஜிக்க செய்யலாமா? இப்படியெல்லாம் ஆகமக்காரர்களின் அறிவுரைகளை நம்பி கொண்டு இருந்தால் மோட்சமும் கிடைக்காது, கடவுளிடமும் நெருங்க முடியாது” என்று ஆகமத்தையும்,வேதத்தையும் கடுமையாக எதிர்த்தவர் ஆதிசங்கரர். இவர் இந்துக்களைப் புண்படுத்துகிறார் என்று சொல்லி ஆதிசங்கரரின் உருவ பொம்மையை எரிப்பார்களா ?

அதே போல் மனுதர்மம் பேசுகிற பிராமணர்களுடைய அடையாளமான பூணூலும், உச்சிக்குடுமியும் தனக்குத் தேவை இல்லை என்று சொல்லி தலையை மொட்டை அடித்துக் கொண்டு பூணூலை அறுத்து எறிந்தவர் தான் ஆதிசங்கரர். ஆதிசங்கரரும் வேத மதத்தைப் புண்படுத்தி விட்டார் என்று இவர்கள் கூறுவதற்கு தயாராக இருக்கிறார்களா?

அது மட்டுமின்றி இந்த ஆகமம் எப்படி இழிவுப்படுத்துகிறது என்பதை, அக்னி கோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் “இந்து மதம் எங்கே போகிறது?” என்ற நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பஞ்சாத்ர ஆகமம் என்ற ஒரு ஆகமம். அந்த ஆகமம் “திருஷ்டவா தேவஹா பாலயாதே” என்ற ஒரு ஸ்லோகத்தை சொல்லுகிறது.இதனுடைய பொருள் “பல ஆச்சார அனுஷ்டான அடிப்படையில் பகவானை விக்கிரங்களில் இருத்தி வைத்து இருக்கிறோம்.இந்த புனிதமான கோயிலுக்குள் ஒரு சூத்திரனோ பஞ்சமனோ ஒரு அடி எடுத்து வைத்தால் கூட அனுஷ்டானங்கள் கறை பட்டு விடும். அதனால் அந்த விக்கிரங்களில் இருந்து பகவான் ஓடிப்போய் விடுவான்” என்று ஆகமம் கூறுகிறது.இதைவிட வெகுமக்களை இழிவுப்படுத்துக்கிற ஸ்லோகம் வேறு எதாவது இருக்க முடியுமா ?

“அப்படி பஞ்சமர்களும், சூத்திரர்களும் கோயிலுக்குள் விட்ட காரணத்தினால் தான் அந்தத் தீட்டை கழிப்பதற்காகத் தான் இப்போதும் ‘சம்ப்ரோக்ஷனம்’ என்ற கும்பாபிஷேகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்” என்று அக்னி கோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் கூறி இருக்கிறார். ஆக கும்பாபிஷேகம் நடத்தி கோயிலுக்குள் வருகின்ற பார்ப்பனரல்லாத இந்து மக்களை அதனால் தீட்டு பட்டு விட்டது என்று சொல்லி அவமானப்படுத்துக்கிற கூட்டம் இதை சுட்டிக் காட்டுகின்றவர்களைப் பார்த்து இந்து மதத்தைப் புண்படுத்தி விட்டார்கள் என்று கூக்குரல் இடுவதற்க்கு என்ன நியாயம் இருக்கிறது ?

அதே போல் இவர்கள் தூக்கி தலையில் வைத்து கொண்டாடும் விவேகானந்தரும் கூட, “நான் பூணூல் அணிய மாட்டேன், அதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறியதோடு சூத்திரர்கள் நீக்ரோக்களை விட அடிமைகளாக இந்த நாட்டில் நடத்தப்பட்டு இருக்கிறார்கள்? அந்த வேறுபாடுகளை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது” என்று வெளிப்படையாக அறிவித்து பூணூலை அணிய மறுத்து மனுதர்மத்தை எதிர்த்து இருக்கிறார். காந்தியார் பூணூல் அணிய மறுத்து மனுதர்மத்தை எதிர்த்து இருக்கிறார்.

இவர்களுடைய உருவங்களையும் சேர்த்து இந்து முன்னணிகளும் பார்ப்பனர்களும் எரிப்பார்களா?

இராசா மீது பாய்கின்ற இந்த கூட்டம் இதற்கு பதில் சொல்லட்டும் .

**தலையங்கம்**

## காந்தி பிறந்த நாளில் ஆர்.எஸ்.எஸ். பேரணிகளா?

கருத்துரிமைக்கு தடை போட வேண்டும் என்று வலியுறுத்தக் கூடிய ‘பார்ப்பனிய பாசிஸ்டுகள்’ அல்ல நாம். இந்தியாவை இந்து இராஷ்டிரமாக்க வேண்டும் என்ற ஆபத்தான மக்கள் விரோத அரசியலை கருத்தியல் தளத்திலேயே முறியடிக்க வேண்டும் என்று நம்புகிற பெரியாரிஸ்டுகள்; ஆனால் தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். 50 இடங்களில் தனது பேரணியை நடத்துவதற்கு காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதியைத் தேர்ந்தெடுப்பதும் அதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதும் கருத்துரிமை என்ற எல்லைகளைத் தகர்க்கக் கூடிய அதிகாரத் திமிரின் வெளிப்பாடு என்றே கூற வேண்டும்.

காந்தி கொலையில் தங்களுக்கு எந்தவித நேரடி தொடர்பும் கிடையாது என்று ஆர்.எஸ்.எஸ். வாதாடலாம். ஆனால் அவர்களின் இந்துராஷ்டிர சித்தாந்தமே காந்தி கொலைக்கு அடிப்படை என்பதை அவர்களால் மறுக்க முடியாது. காந்தி கொலை செய்யப்பட்ட நான்கு நாட்களில் ‘சட்ட விரோத அமைப்பு’ என்று அறிவிக்கப்பட்டு ஆர்.எஸ்.எஸ். அன்றைய ஒன்றிய அரசால் தடை செய்யப்பட்டது (பிப்.4, 1948). காந்தி படுகொலை நிகழ்ந்த இரண்டு நாட்களில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் கைது செய்யப்பட்டார் (பிப். 1, 1948). 6 மாதங்களுக்குப் பிறகுதான் விடுதலை செய்யப்பட்டார் (ஆக. 5, 1948). தடை செய்யப்பட்டதற்கு அரசு முன் வைத்த காரணங்களை தடையாணை தெளிவாக்குகிறது. (1) ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் பல பகுதிகளில் திருட்டு, தீ வைப்பு, கொள்ளை, கொலை போன்ற வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள். (2) சட்ட விரோதமாக வெடி மருந்துகளையும், ஆயுதங்களையும் சேகரித்து வருகின்றனர். (3) போலீஸ் மற்றும் இராணுவத்துக்கு எதிராக சதி செய்யும் தகவல்கள் வந்துள்ளன என்பதே தடைக்கான காரணம்.

இவ்வளவு குற்றச்சாட்டுக்குப் பிறகு அரசு எவ்வித நிபந்தனையுமின்றி தடையை நீக்கி விட்டார்களே (1949, ஜூலை 11) என்று ஆர்.எஸ்.எஸ். தங்களை உத்தம புத்திரர்களாக அகிம்சாவாதிகளாகக் காட்டுவதற்கு வாதங்களை அடுக்குகிறது. அது உண்மைக்கு மாறானது. ஆர்.எஸ்.எஸ். தங்கள் மீது கருணை காட்டி மன்னிக்குமாறு கடிதங்களை எழுதி தொடர்ந்து அழுத்தம் தந்ததாலும், தடை நீடிக்கும் வரை ஆர்.எஸ்.எஸ்.சைக் கலைத்து விடுகிறோம் என்று அரசுக்கு உறுதி தந்ததாலும் தான் கடும் நிபந்தனைகளுடன் தடை நீக்கப்பட்டது. இந்தக் கடிதப் போக்குவரத்துகள் எழுத்துப்பூர்வ ஆதாரங்களுடன் இருக்கின்றன. மதவாதத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்த பட்டேல், ஆர்.எஸ்.எஸ்.சுக்கு ஓரளவு சார்பாகவும் நேரு கடும் எதிர்ப்பாளராகவும் இருந்தனர். பட்டேல் கோல்வாக்கருக்கு எழுதிய கடிதத்தில் ஆர்.எஸ்.எஸ். காங்கிரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆர்.எஸ்.எஸ்.சும் அதை ஏற்றுக் கொண்டது. அதற்கு பதில் கடிதம் எழுதிய கோல்வாக்கர், காங்கிரசின் அரசியல் சேவையை விண்ணை முட்ட புகழ்ந்தார். “ஆர்.எஸ்.எஸ். எப்போதும் காங்கிரசுடன் நேசமாகவே இருக்கும். இரண்டும் புனிதமான சங்கமத்தில் இணைய வேண்டும்” என்று எழுதினார்.

பட்டேலுக்கு மோடி ஏன் சிலை வைக்கிறார் என்பதற்கும் நேருவின் குடும்பம் இவர்களுக்கு ஏன் கசக்கிறது என்பதற்கும் இதுவே அடிப்படைக் காரணம். காங்கிரஸ் எதிர்ப்பாளர்களாக வீரம் பேசும் சங்கிகளின் வரலாறு இப்படி கூனிக் குறுகிக் கிடந்ததுதான்.

காந்தி கொலை பற்றி 20 ஆண்டுகளுக்குப் பிறகு விசாரணை நடத்திய நீதிபதி ஜே.எஸ்.கபூர் ஆணையம் காந்தி கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் தொடர்பு இல்லை என்று கூறி விட்டதாக ஒரு வாதத்தை முன் வைக்கிறார்கள். உண்மையில் ஆணையத்தின் விசாரணை வரம்புகளை நிர்ணயித்த உள்துறை அமைச்சகம் இதில் ஆர்.எஸ்.எஸ். தொடர்பு குறித்து விசாரிக்கும் பகுதியை அதன் வரம்பிலிருந்தே நீக்கி விட்டார்கள்.

காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே, தாங்கள் ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான் என்றும் காந்தி கொலைக்கு ஆர்.எஸ்.எஸ். தொடர்பு இல்லை என்று அத்வானி கூறுவது கோழைத்தனம் என்றும் வெளிப்படையாகவே நூல் எழுதினார்.

காந்தி கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் இவ்வளவு நெருக்கமான தொடர்புகள் வரலாற்று சாட்சியங்களாக நிற்கும்போது காந்தி பிறந்த நாளிலேயே ஆர்.எஸ்.எஸ். பேரணிகளை நீதிமன்றம் அனுமதிப்பது தேசத் தந்தைக்குக் காட்டும் மரியாதையா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது!

விடுதலை சிறுத்தைகள் கட்சி இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கத்தில் சமூக நல்லிணக்கப் பேரணியை அக்.2இல் நடத்த முன் வந்திருப்பதும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் அதில் பங்கேற்க முன் வந்திருப்பதும் வரவேற்கத்தக்கது. திராவிடர் விடுதலைக் கழகமும் இந்தப் பேரணியில் பங்கேற்க முடிவு செய்திருக்கிறது.

# பொன்னியின் செல்வன் ; கல்கியின் வரலாற்றுத் திரிபு

சோழர்கள் வரலாற்றுப் பின்னணியில், கல்கி கிருஷ்ணமூர்த்தி எழுதிய பொன்னியின் செல்வன் விரைவில் இயக்குனர் மணிரத்தினம் இயக்கத்தில் திரைப்படமாக வர இருக்கிறது. அதற்காக பெரும் விளம்பரங்கள் கட்டமைக்கப்படுகின்றன. சோழர் வரலாற்றின் இளவரசராக பட்டம் சூட்டப்பட்ட ஆதித்திய கரிகாலன் படுகொலை செய்யப்பட்டான். இந்தப் படுகொலைப் பற்றிய வரலாற்று செய்திகளை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு செப்டம்பர் 13 இல் வெளியிட்டுள்ளது. அதன் சுருக்கம்,

சுந்தர சோழன் என்ற மன்னனின் மூத்த மகன் ஆதித்திய கரிகாலன், இரண்டாவது மகள் குந்தவை, மூன்றாவது மகன் இராஜ இராஜ சோழன்.

இளவரசன் பட்டம் சூட்டப்பட்ட ஆதித்திய கரிகாலன் கொலை செய்யப்பட்டான், எங்கே, எப்போது, ஏன் கொலை செய்யப்பட்டான் என்பதற்கு நிரூபிக்கப்படக் கூடிய ஆவணச் சான்றுகள் ஏதும் இல்லை. ஆனால், அவனை கொலை செய்தது பார்ப்பனர்கள் என்பது கடலூர் மாவட்டத்தில் உள்ள ஊடையார் குடி கோவில் கற்பகிரகத்தின், மேற்குப் பகுதியில் கல்வெட்டாக பதியப்பட்டு இருக்கிறது. கொலை செய்யப்பட்ட மூன்று பார்ப்பனர்களின் பெயர்களும் அதில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சோமன், ரவிதாசன் எனும் பஞ்சவன் பிரம்மாதிராஜன், பரமேஸ்வரன் எனும் இருமுடிச் சோழ பிரம்மாதிராஜன். பிரம்மாதிராஜன் என்பது அ ந்தக் காலத்தில் சோழ-பாண்டிய மன்னர்கள் பார்ப்பன அதிகாரிகளுக்கு வழங்கும் பட்டப் பெயர். எனவே கொலை செய்தது பார்ப்பன அதிகாரிகள் என்பது உறுதியாகிறது. ஆதித்த கரிகாலன் தனது தந்தைக்காக பாண்டியர் மீது படையெடுத்து சிலரது தலையைத் துண்டித்ததற்கு பழிவாங்கும் நோக்கத்தோடு பார்ப்பன அதிகாரிகளைப் பயன்படுத்தி கொலை செய்யப்பட்டான்.

இராஜ இராஜ சோழன் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த மூன்று பார்ப்பனர் களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் தானமாக வழங்கிய நிலங்களை பறிமுதல் செய்த செய்தியும் அதில் இடம் பெற்றுள்ளது. வரலாற்று ஆய்வாளர்கள் நீலகண்ட சாஸ்திரி, சீனிவாச அய்யங்கார் போன்றவர்கள் கல்வெட்டு ஆதாரங்களை ஏற்காமல் பார்ப்பனர்களை காப்பாற்ற தங்களது கற்பனைகளை வரலாறாக எழுதியுள்ளனர்.

கொலை செய்தவர் பிராமணர் என்பதை உறுதிப்படுத்தும் ஒரே ஆதாரமாக இது இருந்தும் அதை அவர்கள் ஏற்கவில்லை. பிராமணர்களை இதற்காக தூக்கில் போடுவது பாவம் என்று அப்போது சோழர்கள் கருதினார்கள். அப்படி தூக்கில் போட்டால் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துவிடும் என்று பயந்தார்கள். அதன் காரணமாக அவர்கள் தண்டிக்கப்படவில்லை. என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கட்டுரை கூறுகிறது.

பொன்னியின் செல்வன் எழுதிய கல்கி கிருஷ்ணமூர்த்தி “பிராமணர்கள் கொலை செய்த ஆதாரங்களை புறந்தள்ளிவிட்டு இனப் பாசத்தோடு இளவரசனின் சித்தப்பாவாகிய உத்தமச்சோழன் கொலை செய்திருக்கலாம்” என்ற கற்பனைக் கதையை அவிழ்த்துவிட்டிருக்கிறார்.

பொன்னியின் செல்வன் திரைப்படம் உண்மை வரலாறுகளை பேசுமா ?

## பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு பொதுக் கூட்டம்

பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு சார்பில் மூட நம்பிக்கை நாள் ஒழிப்புப் பொதுக் கூட்டம் செப்டம்பர் 24, அன்று மாலை 7 மணியளவில் மேடவாக்கம் அரசுப் பள்ளிப் பேருந்து நிறுத்தம் அருகே நடந்தது. பொது மக்கள் பெரும் கூட்டமாகக் கூடும் வணிக நிறுவனங்கள் நிறைந்த பகுதியில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு கருத்துகளைக் கேட்க ஏராளமான பொது மக்களும் கொள்கை ஆதரவாளர்களும் திரண்டிருந்தனர்.

நிலவழகன் தலைமையில் (மக்கள் தமிழகம்) நடந்த கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வன்னியரசு (வி.சி.க.), வந்தியத்தேவன் (ம.தி.மு.க.), பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பொழிலன் மற்றும் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் உரையாற்றினர். கூட்ட நிகழ்வுகளை வழக்கறிஞர் பாவேந்தன் (தமிழக மக்கள் முன்னணி) ஒருங்கிணைத்தார்.

## பெண்களையும், சூத்திரர்களையும் அவமதிக்கும் மனுசாஸ்திரம்

- பெண்கள் குழந்தைகளாக இருக்கும்போது தகப்பனாரின் கட்டுப்பாட்டிலும் திருமணமான பிறகு கணவனின் கட்டுப்பாட்டிலும் கணவன் இறந்த பிறகு, பிள்ளைகளின் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டுமே தவிர, பெண்கள், தாங்கள் விரும்புகிறபடி (சுயமாக சிந்தித்து) ஒரு போதும் இருக்கக் கூடாது.” (மனு சாஸ்திரம் அத்தியாயம் 5, சுலோகம் 148.)
- கணவன் துராசாரமுள்ளவனாக “(ஒழுக்கக்கேடுகள் உள்ளவனாக) இருந்தாலும் அன்னிய ஸ்திரீலோலனாக (வேறு பெண்களோடு உறவு வைத்துக் கொள்ள துடிப்பவன்) இருந்தாலும், பதிவிரதைகளான பெண் என்பவள், அந்தக் கணவனை தெய்வத்தைப்போல் வணங்க வேண்டும்.” (மனு சாஸ்திரம், அத்.5, சுலோகம் 154)
- பெண்கள் துரோகிகள் ; பெண்களைக் கொல்லுவது பாவமில்லை. படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோகச் சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார். (அத்தியாயம் 9 ; ஸ்லோகம் 17)
- பெண்களையும், பிராமணர் அல்லாதவரையும் கொல்லுவது பாவமில்லை. (அத்தியாயம் 11; ஸ்லோகம் 65)
- சூத்திரர்கள் அனைவரும் பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்.
  சூத்திரர் என்போர் ஏழு வகைப்படுவர். 1. போரில் புறங்காட்டி ஓடியவன், 2. போரில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன், 3. பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியம் செய்பவன், 4. விபச்சாரி மகன், 5. விலைக்கு வாங்கப்பட்டவன், 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன், 7. தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்பவன். (அத்தியாயம் 8, ஸ்லோகம் 415)
- ஊர் - சேரிப் பிரிவினை
  இவர்கள் (தாழ்த்தப்பட்டோர்) அனைவரும் பட்டணத்திற்கும், ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, சுடுகாட்டிற்கு அருகிலுள்ள இடம், மலைப் பூந்தோட்டம் இவைகளில், அனைவருக்கும் இவர்கள் இன்ன தொழிலாளிகள் என்று தெரியும்படி தன் தன் தொழிலைச் செய்து கொண்டு வாழ செய்ய வேண்டியது. (அத்தியாயம் 10; ஸ்லோகம் 50)
- பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் படிக்கக் கூடாது
  சூத்திரன் மனப்பாடம் பண்ணும் நோக்கத்துடன் வேதம் படிப்பதைக் கேட்டால், அவனது காதுகளில் காய்ச்சிய ஈயத்தையும், அரக்கையும் ஊற்ற வேண்டும். அவன் வேதம் ஓதினால் ஓதும் நாக்கு துண்டிக்கப்பட வேண்டும். வேதத்தில் முழுத் தேர்ச்சி அடைந்தால் அவனது உடம்பு துண்டு துண்டாக வெட்டிச் சிதைக்கப்பட வேண்டும். (அத்தியாயம் 12; ஸ்லோகம் 4)

- சென்னை மாவட்டக் கழகத் துண்டறிக்கை

# வானொலியில் ஆறுமுறைப் பேசிய பெரியார்

*பெரியார் வானொலியில் பேசினாரா என்று கேட்டால், காந்தி கொல்லப்பட்ட போது நிலவிய கொந்தளிப்பான சூழலில் பேசிய அமைதிப் பேச்சைத்தான் பெரும் பாலானோர் குறிப்பிடுவர்; அநேகமாக அதுதான் பெரியாரின் முதல் ஒலிபரப்பு.*

*காந்தி மறைந்த மறுநாள் (31.1.1948) திருச்சி வானொலி நிலையத்திலிருந்து அப்பேச்சு ஒலி பரப்பப்பட்டது. அது 1939இல் தொடங்கப்பட்ட திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலியால் ஒலிப்பதிவு செய்யப் பட்டதாகும். சென்னையில் 1924 ஜூலை 31 அன்று முறையான வானொலி ஒலிபரப்பு முதன்முதலாகத் தொடங்கியது. இந்த ஒலிபரப்பைப் பெரியார் கேட்டிருக்க வாய்ப்பில்லை. குறிப்பிட்ட அந்த நாளில், அவர் திருவனந்தபுரம் மத்திய சிறையில் இருந்தார். வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டு இரண்டாம் முறை சிறைவாசத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். அது சிறை வாசத்தின் 15ஆம் நாள். அறிவியல் முன்னேற்ற நடவடிக்கையில் தமிழ்நாடு முதல் அடியை எடுத்துவைத்த நேரத்தில், அவர் கேரளத்தில் சமூகச் சமத்துவ முயற்சியில் ஓர் அடியை முன்வைத்தார்.*

**பெரியாரின் ஒலிபரப்புகள்**

*அகில இந்திய வானொலி தொடங்கப்பட்ட காலம் முதல் பெரியார் மறைவு வரையிலான (1938-1973) 35 ஆண்டுகளில், இப்போது கிடைக்கும் ஆவணங்களின் ஆதாரப்படி, ஆறு முறை பெரியாரின் பேச்சு ஒலிபரப்பாகியுள்ளது. 1948இல் காந்தி காலமானபோது மக்களை அமைதிப்படுத்து வதற்கான உரை, 1965இல் சீனப் போர் நிகழ்ந்தபோது மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கான உரை, 1972இல் ராஜாஜி காலமானபோது ஆற்றிய இரங்கல் உரை என மூன்று உரைகளைப் பெரியார் நிகழ்த்தியுள்ளார். தவிர, நேர்முகம் என்ற வகையில் மேலும் 3 ஒலி பரப்புகள் நிகழ்ந்துள்ளன. 1968 இல் கே.பி.கணபதி (மாறன்) என்ற வானொலிக் கலைஞர் கண்டது முதலாவது நேர்முகம். 1970இல் மத்திய இணை அமைச்சர் எஸ்.சந்திரசேகர் நிகழ்த்தியது இரண்டாவதும், மூன்றாவதும் நிறைவானதுமான நேர்முகம் 1973இல் ஒலிபரப்பானதாகும். இந்த நேர்காணலில் பெரியாரோடு பேசியவர் ஜி.சுப்பிரமணியம் என்ற வானொலி அலுவலர். இந்த மூன்று பேச்சுகள், மூன்று நேர்முகம் ஆகியவற்றின் விவரங்களைக் கவனித்துப் படிக்கும் வாசகர்களுக்கு இவை இயல்பானதாகவே தோன்றும், ஒன்றைத் தவிர. மத்திய அமைச்சர் பெரியாரை நேர்முகம் கண்டார் என்பதுதான் அது. இந்திரா காந்தியின் அமைச்சரவையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை இணை அமைச்சராக இருந்தவர் டாக்டர் எஸ்.சந்திரசேகர் (1918-2001). குடும்பக் கட்டுப்பாடு தொடர்பாகப் பெரியாரிடம் ஆலோசனை கேட்பதற்காக வந்த அவர், பெரியாரை (அடையாறு) வீட்டில் நேர்முகம் கண்டார். பெரியாரின் கருத்துகளைப் பெற்று ஆச்சரியமடைந்த அமைச்சர் ஒரு கருத்தை 'மூலமான கருத்து' (original suggestion) என்று மனமகிழ்ந்து சொன்னார்.*

**50% இடஒதுக்கீடு**

***அமைச்சர்:*** *"ரெண்டு குழந்தை போதும்னு சொல்றோம். அதுல என்ன கஷ்டம்னா, இப்போ ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை பிறந்துவிட்டால் கஷ்டம் இல்லை. இரண்டும் பொண்ணா போய்விட்டது என்றால் இன்னும் ஒன்றுக்கு ட்ரை (Try) பண்றாரு ஆளு, ஆண் குழந்தை வேணும்னு. அதுக்கு எப்படி அவங்கள எஜுகேட் (Educate) பண்றதுன்னு எனக்குத் தெரியல. பெண் குழந்தை பிறந்தாலும் அதோடு நிறுத்திக்கலாம், ஒண்ணும் கஷ்டம் இல்லை. பெண்ணும் ஆணும் ஒண்ணுன்னு சொல்றதுக்கு நம்மால முடியல. நான் சொல்றது என்னன்னா, ரெண்டு குழந்தை இருந்தா போதும். இதை எப்படி மக்களுக்குச் சொல்றது?" இதுதான் அமைச்சரின் கேள்வி, சந்தேகம்.*

***பெரியார்:*** *"அந்த எண்ணம் மக்கள் மனசுல இருந்து மாற வேண்டுமானால் 50 சதவீதம் பெண்களுக்கு உத்தியோகம், 50 சதவீதம் ஆம்பளைக்கு உத்தியோகம் (என்று செய்துவிட வேண்டும்). ஒரு ஆபீஸ்ல 100 உத்தியோகஸ்தர்கள் இருந்தா 50 பெண்கள் இருக்காங்களான்னு கேட்கணும். இல்லா விட்டால், அதைப் போடுன்னு சொல்லணும். அப்ப பெத்தவங்களுக்கு ஆண் இருந்தாலும் ஒண்ணு, பெண் இருந்தாலும் ஒண்ணு என்றாகும். இந்த ஆம்பளை எல்லாம் உத்தியோகம் பார்க்கிறார்கள், பொம்பளைங்க எல்லாம் வீட்ல இருக்காங்க. அதனால நமக்கு ஆம்பளப் புள்ள ஒண்ணு வேணும்னு தோணுது. அவன் சம்பாதிக்கிறான் என்று தோணுது. அதனால நாம்*

**கட்டுரையில் வெளி வராத செய்தி: சென்னையில் நடந்த புத்தர் பிறந்த நாள் விழவில் பெரியாரைப் பேச அழைத்தார்கள். சென்னை வானொலி அனைத்து தலைவர்கள் பேச்சையும் பதிவு செய்து ஒலிபரப்பியது. பெரியார் பேச்சை மட்டும் ஒலி பரப்பவில்லை. அதைக் கண்டித்த பெரியார் 1956இல் நாடெங்கும் இராமன் பட எரிப்புப் போராட்டத்தை அறிவித்தார்.**

*ஈக்குவலைஸ் (equalise) பண்ணிட்டா உத்தி யோகத்தை ஆளுக்குப் பாதின்னு" (ஆதாரம்: பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள், திருத்தப்பட்ட பதிப்பு).*

*இதைக் கேட்ட அமைச்சர் "இந்த யோசனை நல்லா இருக்குது. 'ஒரிஜினல் சஜஷன்'. இதை நாங்க எக்ஸாமின் பண்ணிப் பார்க்கிறோம்" என்றார். இந்த நேர்முகம் 8 மார்ச் 1970இல் சென்னை வானொலியில் ஒலிபரப்பானது. பெரியார் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு கேட்கிறார். ஆனால் 33%-ஐயே 75 ஆண்டுகளுக்குப் பின்னும் நாடு இன்னும் நடைமுறைப்படுத்தத் தயாராகவில்லை.*

**இறுதி ஊர்வல வர்ணனை:** *அமைச்சரின் இந்த நேர்முகத்திற்குப் பிறகு 18.10.1973இல் திருச்சி வானொலியில் ஜி.சுப்ரமணியம் கண்ட நேர்முகம் ஒலிபரப்பானது. இது ஒலிபரப்பான இரண்டு மாதங்களில் (24.12.73) பெரியார் காலமானார். அரசு மரியாதையுடன் நிகழ்ந்த இறுதி ஊர்வலத்தை அப்போதிருந்த ஒரே மக்கள் தொடர்பு ஊடகமான வானொலி நேரலையாக ஒலிபரப்பியது. 25.12.73 அன்று பிற்பகல் 2:45 மணிக்கு அதுவரை வரலாறு கண்டிருக்காத மனிதரின் இறுதி ஊர்வல வர்ணனை தொடங்கி ஒலித்தது. வானொலியில் அதுதான் பெரியார் தொடர்பான நிறைவான ஒலிபரப்பு. மறைவு வரை மொத்தம் ஆறு ஒலிபரப்புகளே பெரியாருக்குச் செய்யப்பட்டிருந்த நிலையில், வானொலியில் இப்போது ஆண்டுக்கு இரண்டு நிகழ்ச்சிகளாவது (பிறந்த நாள், நினைவு நாள்) இடம்பெறுகின்றன. முதலாம் ஆண்டு நினைவுரையைத் தில்லை வில்லாளன் தொடக்கி வைத்தார். வானொலி ஒலி பரப்பைப் பெரியார் பயன்படுத்தினாரோ இல்லையோ, அரசாங்கம் தன்நோக்கத் திற்காகப் பெரியாரைப் பயன்படுத்திக் கொண்டது என்று உணர முடிகிறது. மக்களை அமைதிப்படுத்தவும், ஒற்றுமைப் படுத்தவும், நாட்டுத் தலைவரைக் கௌரவப் படுத்தவும், மக்களை முன்னேற்றவும் என அரசு பெரியாரின் பேச்சைப் பயன்படுத்திக் கொண்டது. வான் அலைகள் அரசுக்கு அல்ல, மக்களுக்கு உரிமையானது என்ற 2000ஆம் ஆண்டில் வெளிவந்த தீர்ப்பு பெரியார் காலத்தில் வந்திருந்தால், நாம் வாழும் தமிழ்நாடு நாம் இப்போது வாழும் தமிழ்நாடாக இருந்திருக்காது என்றே தோன்றுகிறது.*

**– பழ. அதியமான், உதவி இயக்குநர் (ஓய்வு),**
**சென்னை அகில இந்திய வானொலி நிலையம்.**

**நன்றி: 'இந்து தமிழ் திசை' நாளேடு**

*(4ஆம் பக்கத் தொடர்ச்சி)*

***அரசூர் :*** *பெரியாரின் 144வது பிறந்த நாள் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சூலூர் ஒன்றியம் அரசூர் பெரியார் சமத்துவ புரம் பகுதியில் உள்ள அய்யா சிலைக்கு மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்பு நிகழ்வாக நடைபெற்றது. தலைமை: தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம். முன்னிலை : சூலூர் பாபு,பொங்கலூர் கார்த்தி,வழக்கறிஞர் பாபு. கலந்துகொண்ட தோழர்கள் : அத்தப்ப கவுண்டன்புதூர் தங்கராசு, மைலம்பட்டி அம்பேத்கர் நகர் தோழர் தங்கராசு,சின்னியம் பாளையம் தோழர்கள் வழக்கறிஞர் விஷ்ணு, மொபைல் கடை தோழர் சிவா, விக்னேஷ்பாபு,லோகேஷ், சூலூர் சாந்தி பாபு,கோகுல்.*

**திருப்பூரில் :** *திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 18.09.22 ஞாயிறு அன்று பெரியார் பிறந்த நாள் நிகழ்வுகள் "சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம்" எனும் முழக்கத்தோடு தெருமுனை கூட்டங்களாகவும் கழக கொடியேற்றும் நிகழ்வாகவும் நடைபெற்றது. காலை 9 மணிக்கு ஆரம்பித்த இந்த நிகழ்வுகள் திருப்பூரில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு இரவு வரை நடைபெற்றது . தெருமுனை கூட்டங்கள், கொடியேற்றும் நிகழ்வுகளுக்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார். கழக மாவட்டத் தலைவர் முகில் இராசு முன்னிலை வகித்தார்கள்.*

*தொடக்க நிகழ்வு திருப்பூர் ராயபுரம் பகுதியில் காலை 9 மணி அளவில் பறையிசையுடன் ஆரம்பித்து கழகத்தின் இணையதள பொறுப்பாளர் பரிமளராசன் தலைமையில் நடைபெற்றது. பெரியார் பிறந்த நாளை ஏன் கொண்டாடுகிறோம் ? சனாதனத்தை ஏன் வேரறுக்க வேண்டும் என்கின்ற செய்திகளை பரிமளராசன், சிவகாமி,முகில் ராசு ஆகியோர் விளக்கிப் பேசினர். திமுகவின் அப்பகுதி பொறுப்பாளர் ராமகிருஷ்ணன், மதிமுக வின் பொறுப்பாளர் சரவணன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை தெரிவித்து பேசினார்கள்.தோழர் அய்யப்பன் நன்றி கூறினார்.*

*இரண்டாவது நிகழ்வு திருப்பூர் அணைமேடு பகுதியில் மிக சிறப்பாக நடைபெற்றது. டேவிட் அவர்கள் தலைமையில் அப்பகுதியில் ஒரு சிந்தனை பலகை திறக்கப்பட்டது. சிந்தனைப் பலகையை கழகப் பொருளாளர் துரைசாமி திறந்து வைத்தார். முதல் சிந்தனையாக "ஜாதி ஒழிப்பே சமூக விடுதலை" எனும் பெரியாரின் சிந்தனையை தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி எழுதினார். அப்பகுதியில் பள்ளி மாணவி அனு பெரியார் குறித்தும் பெண் விடுதலை குறித்தும் சிறப்பாக பேசி பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றார். அப்பகுதி மக்கள் கழகத் தோழர்களை அன்புடன் வரவேற்று காலை உணவு, தேநீர் வழங்கி சிறப்பித்தனர். தோழர் டேவிட் நன்றியுரையில் அப்பகுதியில் மக்கள் பாதிப்புக்கு உள்ளான போது கழகம் துணை நின்றதை குறிப்பிட்டு பேசினார்.*

*மூன்றாவது நிகழ்வாக திருப்பூர் மாஸ்கோ நகர் பகுதியில் கழக மாநகர செயலாளர் மாதவன் தலைமையில் கொடியேற்றும் நிகழ்வும் தெருமுனை கூட்டமும் நடைபெற்றது. கழகக் கொடியை கோமதி ஏற்றி வைத்தார். சண்.பாண்டியநாதன், ஆசிரியர் சிவகாமி ஆகியோர் பெரியாரின் இன்றைய தேவை குறித்தும் சனாதனத்தின் ஆபத்து குறித்தும் பேசினார்கள். அடுத்து ரங்கநாதபுரம் பகுதியில் கழகத் தோழர் பிரசாத் தலைமையில் நடைபெற்றது. கழகப் பொருளாளர் துரைசாமி, பிரசாத் ஆகியோர் பொதுமக்களிடம் ஒன்றிய பாஜக அரசின் ஆபத்தான மனுவாத போக்கினை விளக்கிப் பேசினார்கள். அடுத்ததாக பெரியார் காலனி பகுதியில் கொடியேற்றம் மற்றும் தெருமுனை கூட்டம் நடைபெற்றது.கழகக் கொடியை ஸ்ரீஜா ஏற்றி வைத்தார்கள். பெரியார் காலனி பகுதியில் சன் பாண்டியநாதன், ஆசிரியர் சிவகாமி ஆகியோர் பெரியாரின் இன்றைய அவசியம் குறித்து பேசினார்கள். கவுசல்யா நன்றி கூறினார்.*

*அடுத்ததாக மதிய உணவு இடைவேளை. கழக மாவட்டத் தலைவர் முகில் ராசு இல்லத்தில் பரப்புரையில் பங்கேற்ற அனைத்து தோழர்களுக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. மீண்டும் பிற்பகல் பரப்புரை அம்மாபாளையம் பகுதியில் தோழர் மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. சனாதனத்தின் ஆபத்துகள் குறித்தும் பெரியாரின் தேவை குறித்தும் பரிமளராசன், ஆசிரியர் சிவகாமி, மாரிமுத்து ஆகியோர் விளக்கி பேசினார்கள்.*

*அடுத்து ஆத்துப்பாளையம் பகுதியில் தனபால் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மதன் கழக கொடியினை ஏற்றி வைத்தார். அப்பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர் பரமானந்தம் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா,பரிமள ராசன் ஆகியோர் உரையாற்றினார்கள். வீரலட்சுமி நன்றி கூறினார். அப்பகுதியைச் சேர்ந்த திமுக பொறுப்பாளர்கள் பத்மநாபன் அருண்குமார் ஐயப்பன் ஆகியோர் கழகத்தின் தெருமுனை கூட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நிகழ்வில் பங்கேற்றனர். அடுத்து அனுப்பர்பாளையம் புதூர் பகுதியில் தோழர் முத்து தலைமையில், சாரதி அவர்கள் கழக கொடியினை ஏற்றி வைத்தார். இங்கு ஆசிரியர் சிவகாமி உரையாற்றினார். அடுத்து சந்தைப்பேட்டை பகுதியில் தனபால் தலைமையில் தெருமுனை கூட்டம் நடைபெற்றது ஆசிரியர் சிவகாமி உரையாற்றினார்.*

*குளத்துப்பாளையம் பகுதியில் இளமாறன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக பொருளாளர் துரைசாமி, ஆசிரியர் சிவகாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.தோழர் சரஸ்வதி நன்றி கூறினார். வீரபாண்டி பிரிவில் ராஜசிங்கம் தலைமையில் தெருமுனை கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் முகில் ராசு, தனபால், ஆசிரியர் சிவகாமி ஆகியோர் உரையாற்றினார்கள். கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார். தனகோபால் நன்றி கூறினார். இத்தோடு இரவு 8.30 அளவில் கழகத்தின் தெருமுனை கூட்டங்கள் கொடியேற்றும் நிகழ்வுகள் நிறைவுற்றன.*

**மடத்துக்குளத்தில்:** *திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் ஒன்றியம் தந்தை பெரியாரின் 144 வது பிறந்தநாள் விழா 17.09.22 அன்று காலை 9 மணி அளவில் கடத்தூர் புதூரில் தொடங்கியது. கழகக் கொடியேற்றிய தோழர்கள் : புதூர் - தோழர் சங்கீதா; கடத்தூர் -ஆரியமாலா; கணியூர் - செல்வி; காரத்தொழுவு - கணக்கன்; குட்டைத் திடல் - மாரிமுத்து; மடத்துக்குளம் - ஜோதி மோகன் ருத்ரா பாளையம் - கணக்கன்.*

*பாலப்பம்பட்டி சமத்துவத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில பொருளாளர் துரைசாமி பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தார். மடத்துக்குளம் மோகன் இல்லத்தில் தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவாக மாட்டு கறி பிரியாணி வழங்கி சிறப்பித்தனர். மீண்டும் பிற்பகல் 3.00 மணி அளவில் நீலம்பூர் பகுதியில் கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது. கொழுமம் சமத்துபுரத்தில் மகிழவன் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்க கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நிறைவாக தோழர் ராஜேந்திரன் இல்லத்தில் அனைத்து தோழர்களுக்கும் தேநீர் வழங்கப்பட்டு நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. திராவிட முன்னேற்ற கழக தோழர்கள் பாரூக் ஊராட்சி மன்ற உதவித் தலைவர் - கடத்தூர் திமுக மகுடீஸ்வரன்,வெள்ளியங்கிரி - விடுதலை சிறுத்தைகள் கட்சி த சதீஷ்குமார், திருப்பூர் மாவட்ட செயலாளர் - மாதவன் செல்வகுமார் மூர்த்தி சதீஷ் - கம்யூனிஸ்ட் பாலு கொழுமம் - வெள்ளிங்கிரி திமுக கடத்தூர் கிளைச் செயலாளர் - சதீஷ் தொப்பம்பட்டி விசிக அமைப்பாளர் - திருப்பூர் அய்யப்பன், மகிழவன், ராசசிங்கம், மாரிமுத்து ஆகியோர்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெரியார் பிறந்த நாள் எழுச்சி; பரப்புரைக் கூட்டங்கள்

*பெரியார் பிறந்த நாளான செப்.17 அன்று கொடி ஏற்றம்; தெருமுனைப் பரப்புரை; பொதுக் கூட்டங்களை கழகம் நடத்தியது.*

**தூத்துக்குடியில் பால் பிரபாகரன் உரை :** ஆரிய விசம் முறிக்கும் அருமருந்து தந்தை பெரியாரின் 144வது பிறந்த நாளில் சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்பீர் என்று தி.வி.க பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் அறைகூவல் விடுத்தார்.

தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகம் சார்பில் 17.09.2022 தந்தை பெரியாரின் 144வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் சனாதன எதிர்ப்பு விளக்கப் பொதுக் கூட்டமாக தூத்துக்குடி வடக்கு சோட்டையன்தோப்பு தருவைகுளம் முதன்மை சாலையில் நடைபெற்றது. நிகழ்விற்கு தி.வி.க.மாவட்ட துணைத் தலைவர் ச.கா.பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். வே.பால்ராசு, ச.ரவிசங்கர், ம.அசோக் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் சா.த.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.

திராவிடர் விடுதலைக் கழக பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் அவர் தனது உரையில் “தந்தை பெரியாரின் உழைப்பால் சமத்துவ சமூக மாற்றம் ஏற்பட்டு வரும் நிலையில் மீண்டும் சமத்துவத்திற் எதிரான சனாதன கருத்தியலை ஆளும் ஒன்றிய அரசு திணிப்பதுடன் தமிழ்நாட்டில் ஆளுனர் மற்றும் போலிதமிழ் தேசியவாதிகளை கொண்டு சனாதனத்தை நியாயப்படுத்தி வருகிறார்கள்.

அய்.பி.எஸ். அதிகாரியாக இருந்தவரை ஆடு மேய்ப்பது சிறந்தது என சனாதன கருத்தை பேச வைக்கிறது. ஆனால் ஆடு மேய்க்கும் பிள்ளைகளை படிக்க வைத்து ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வந்து சமத்துவம் பேணுவது பெரியாரியம்

தற்போது ஒரே நாடு , ஒரே மொழி, ஒரே கல்வி , ஒரே தேர்வு , மருத்துவ கல்விக்கு நீட்டு, பிற்போக்கு கல்வித் திட்டத்திற்கு தேசிய கல்வி திட்டம், ஆகம விதி எனும் சாதிய கட்டுமானம் போன்றவற்றால் சனாதனத்தைப் புகுத்தி இந்துராஷ்ட்ரம் அமைக்க புதிய அரசியல் சட்டம் எழுதியது என மீண்டும் ஆரிய விசநாகம் தலைதூக்க தொடங்கியுள்ளது. இந்நேரத்தில் நாம் அமைதி காப்போம் எனில் நம் தாத்தா சட்டை அணிய முடியாதது போல், கல்வி கற்க முடியாததைபோல், செருப்பு அணி முடியாதது போல் நமக்கும் ஏற்படும் எனவே சனாதனத்தின் வேரறுத்து சமத்துவ சமூகம் அமைக்க ஆரிய விசம் முறிக்கும் அருமருந்து சமத்துவ சமுதாயத்தின் முகவரி தந்தை பெரியார் பிறந்த நாளில் உறுதியேற்க வாரீர் என குறிப்பிட்டார்.

நிகழ்வில் திராவிடர் தமிழர் கட்சி மாநில அமைப்பு செயலாளர் சு.க.சங்கர், எஸ்.டி.பி.அய் கட்சி மைதீன்கனி, தமிழ் புலிகள் கட்சி பொறுப்பாளர் கத்தார் பாலு, மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து 8வது வட்ட தி.மு.க. கவுன்சிலர் வசந்தகுமாரி , தூத்துக்குடி ஒன்றிய 4 வது வார்டு தி.மு.க. கவுன்சிலர் ஆனந்தி, கிருத்தவர் வாழ்வுரிமை இயக்க ஒருங்கிணைப்பாளர் பாதிரியார் சுந்தரி மைந்தன், வடக்கு சோட்டையன் தோப்பு வி.சி.க.வழக்குரைஞர் செந். அர்ஜுன், தி.மு.க. மாணவரணி இள.கார்த்தி, சட்டக் கல்லூரி மாணவர் அரவிந்த், தி.வி.க.மாவட்ட துணைச் செயலாளர் மாரிசாமி, சூரங்குடி ஊராட்சி துணைத் தலைவர் சதீஸ், புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் சுஜித், திராவிடர் கழகத் தோழர் செ. செல்லத்துரை, மற்றும் திராவிடர் விடுதலைக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், தமிழ் புலிகள் கட்சி தோழர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். நிறைவாக தி.வி.க.மாவட்ட பொருளாளர் சந்திரசேகர் நன்றி கூறினார். விழாவில் கலந்து கொண்ட தோழர்களுக்கு தி.வி.க.வெளியீடுகள் (புத்தகம்) தந்தைபெரியார் 144ஆவது பிறந்த நாள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**குமாரபாளையம் :** நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் தந்தை பெரியாரின் 144 வது பிறந்தநாள் விழா, 17.09.2022 அன்று காலை 10 மணியளவில் இருசக்கர வாகனப் பேரணி காவேரி நகரில் துவங்கியது. புது பாலம் அருகில் காவிரி நகரில் கொடிக்கம்பத்தில் ரேணுகா திராவிடமணி கொடியேற்றினார். பாலம் அருகில் தோழர் சந்திராவும், பேருந்து நிலையம் அருகில் பரிமளம் அவர்களும், பேருந்து நிலையம் மறுபுறம் திராவிடர் கழக கொடியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும், அதனைத் தொடர்ந்து காவல் நிலையத்திற்கு தந்தை பெரியாரின் 144 ஆம் ஆண்டு பிறந்தநாள் வாழ்த்து அட்டை இனிப்பும் வழங்கப்பட்டது.

பின்னர் நகராட்சி தெருவில் அறிஞர் அண்ணா சிலை, பெரியார் உருவப்படத்துக்கும் மாலை அணிவிக்கப்பட்டது. நகராட்சி ஊழியர்களுக்கு வாழ்த்து அட்டையும், இனிப்பும் வழங்கப்பட்டது. பின்னர் தாசில்தார் அலுவலகம் சென்று அங்கும் வாழ்த்து அட்டையும், இனிப்பும் வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர் நகரில் புதிதாக நடப்பட்ட கொடி மரத்தில் குருவை வேல்முருகன் கொடியேற்றி அனைத்து கழகத் தோழர்களுக்கும் பழரசம் வழங்கினார். சேலம் முக்கிய சாலை வழியாக கம்பன் நகரில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

காமராசர் சிலையிலிருந்து சமத்துவபுரம் சென்று தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து ஊர்வலம் நிறைவுற்றது. அனைத்து கழகத் தோழர்களுக்கும் நன்கொடையாளர்களின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

25.09. 22 அன்று தந்தை பெரியார் அவர்களின் 144 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு தொடங்கிய பொதுக்கூட்டம் முதல் நிகழ்வாக தலித் சுப்பையா அவர்களின் நினைவுகளோடு புதுவை "விடுதலை குரல்" இசைக் குழுவினரின் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட காப்பாளர் கேப்டன் அண்ணாதுரை தலைமையில் மாவட்ட தலைவர் மு சாமிநாதன், மாவட்ட செயலாளர் மு. சரவணன், மாவட்ட அமைப்பாளர் அ. முத்துப்பாண்டி ஆகியோரது முன்னிலையில் நகரத் தலைவர் மீதா. தண்டபாணி வரவேற்பு கூறினார்.

பொதுக்கூட்ட மேடையில், மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் வரவு செலவு கணக்கை படித்தார் . திராவிடர் விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி தொடக்கவுரை நிகழ்த்தினார். இறுதியாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். குமாரபாளையம் நகரச் செயலாளர் செ. வடிவேலு நன்றி கூறினார். இரவு 10:15 மணிக்கு கூட்டம் நிறைவு பெற்றது. அனைவருக்கும் கழகத் தோழர் மாதுராஸ் இரவு உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தார்.

பொதுக் கூட்டத்தில் கொரோனா நோயினால் மறைந்த திராவிடர் விடுதலைக் கழகத்தினுடைய தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று குமாரபாளையம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகர செயலாளர் எஸ் சேகர் அவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டு மறைந்த அனைவருக்கும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலியும் வீர வணக்கமும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சி அன்று மதியமே குமாரபாளையம் வந்து எங்களோடு நிகழ்ச்சியை சிறப்பு செய்ய தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் அவர்கள் சென்னையில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சிக்கு நங்கவள்ளி, திருச்செங்கோடு, வெண்ணந்தூர், காவலாண்டியூர், ஈரோடு, ராசிபுரம், காளிப்பட்டி போன்ற பகுதிகளில் இருந்தும் குமாரபாளையம் தோழர்கள் அனைவரும் குடும்பம் குடும்பமாக வந்து பங்கெடுத்துக் கொண்டார்கள்.

கூட்டம் துவங்குவதற்கு முன்பு கொரோனாவினால் பாதிப்புக்குள்ளாகி இறந்த அனைவருக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. கொரோனா காலத்தில் கொரோனா நோயிலிருந்து நோயாளிகளை காப்பாற்ற தன் உயிரை பொருட்படுத்தாமல் பாடுபட்ட மறுத்தவர்கள் செவிலியர்கள் அதன் உடன் நின்றவர்கள் தூய்மை பணியாளர்கள் காவல்துறையைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

**கோவை :** காந்திபுரம் - தந்தை பெரியாரின் 144 - வது பிறந்தநாளில் கோவை காந்திபுரம் பெரியார் சிலைக்கு மாநகரத் தலைவர் நேருதாசு மாலை அணிவித்தார். புரட்சிதமிழன் உறுதிமொழி வாசிக்க அனைத்து தோழர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். கூடியிருந்த தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் துண்டறிக்கை வழங்கப்பட்டது. மாநகர தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**சித்தாபுதூர்** - கழகத் தோழர் லோகு தலைமையில் நடைபெற்றது. நிலா அறிவரசு உறுதிமொழி வாசிக்க அனைத்து தோழர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்வில் தோழர்கள் நிர்மல்குமார், நேருதாசு முன்னிலையில் தோழர்கள் சாத்தூர் சதீஷ் ஷைனிமேரி திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தனர். (குறிப்பு) சதீஷ் அவர்கள் நான் அறிவியலை விரும்பி படிப்பதால் எனக்கு கடவுள் ஜாதி மதம் எல்லாம் பிடிக்கவில்லை பெரியார் தான் பிடித்தார். அதனால் பெரியார் கொள்கைகளை பரப்ப நான் கழகத்தில் இணைகிறேன் என்று நிகழ்வில் உரையாற்றினார்.

**பீளமேடு -** பீளமேட்டில் இராஜாமணி தலைமையில் நடைபெற்றது. பொன்மணி உறுதிமொழிவாசித்தார். கூடியிருந்த தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகளும் ஜசனாதன எதிர்ப்பு துண்டறிக்கையும் வழங்கப்பட்டது.

**சவுரிபாளையம்** பகுதியில் பெரியார் படத்திற்கு துளசி அறிவரசு மாலை அணிவித்தார். குமரேசன் உறுதிமொழி வாசித்தார். சிவராசு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். பனைமரத்தூர், தந்தை பெரியாருடைய 144 வது பிறந்த தினம் காலை 8 மணிக்கு பனைமரத்தூர் நியாய விலை கடைக்கு முன்பாக நடைபெற்றது. பெரியார் பிஞ்சு யாழினி படத்துக்கு மாலை அணிவித்தார். நிகழ்வில் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் தோழர்கள் கலந்து கொண்டனர் தோழர்கள் நேருதாஸ், மணிகண்டன் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். மதிமுக சஞ்சய் பாபு, வழக்கறிஞர் தர்மலிங்கம், இனியன்நேருதாஸ் அனைவருக்கும் இனிப்பு வழங்கி உறுதிமொழி எடுக்கப்பட்டது

**இரத்தினபுரி:** பெரியாரின் 144 பிறந்தநாள் விழா, பேரறிஞர் அண்ணா 114 வது பிறந்தநாள் விழா திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ரத்தினபுரி ஆறு முக்கு பிரிவில் ஜீவா மன்றம் முன்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு நேருதாஸ் தலைமை வகித்தார். வெங்கட் வரவேற்பு கூறினார், சதீஷ் முன்னிலை வகித்தார். புரட்சிகர இளைஞர் முன்னணி மாவட்ட பொறுப்பாளர் மலரவன், திராவிட முன்னேற்றக் கழகப் பகுதி கழகப் பொறுப்பாளர் லோகு, தமிழ்ப் புலிகள் கட்சி பொதுச் செயலாளர், இளவேனில், புரட்சித் தமிழன் திராவிடர் விடுதலைக் கழகம், சி.பி.ஐ.எம்.எல். லிபரேஷன்-பாலசுப்பிரமணியம், சி.பி.ஐ.எம்.எல். ரெட் ஸ்டார் - சுர்ஜித் ராஜா, சாந்தகுமார் - செயலாளர் ஜீவாமன்றம், சிபிஐ - குரு, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தங்கராசு, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, சாஜித் - தந்தை பெரியார் திராவிடர் கழகம், வெண்மணி- தலைவர், திராவிடர் தமிழர் கட்சி, வெள்ளிங்கிரி - கோவை மாவட்ட செயலாளர் திராவிடர் விடுதலைக் கழகம், அமிலா உறுதிமொழி வாசித்தார். மாநகர செயலாளர் நிர்மல் குமார் நன்றி கூறினார். தோழர்கள், ஜெயந்த் மாதவன், கிருஷ்ணன், புரட்சித் தமிழன், ராஜலட்சுமி, பெரியார் பிஞ்சு அறிவுக்கனல், சுரேஷ், ரஞ்சித், மருதாசலம், பொன்மணி சைனி, மகிழ், தமிழ் கொடி, அருள் மொழி, தமிழ் நம்பி வெங்கடேஷ், சபரி ஆனந்த் சமரன், தமிழரசன், அறிவாயுதம் செந்தில், பாரதிவாசன்,இனியவன் ஆகியோர் உட்பட, திரளாக நிகழ்வில் பங்கெடுத்து கொண்டனர். கலந்து கொண்ட தோழர்களுக்கு அனைவருக்கும் இனிப்புகள், தேநீர் வழங்கப்பட்டது. மாநகரில் கலந்து கலந்து கொண்ட தோழர்கள்: நிர்மல் குமார், நேரு தாசு, கிருஷ்ணன், இராஜாமணி, ஜெய்ந்த், வெங்கட், மாதவன் சங்கர், புரட்சித் தமிழன், ரத்தினபுரி சதீஷ், துளசி அறிவரசு, குமரேசன், மனோரஞ்சனி, அமிலா, மருதாசலம், பொன்மணி, சைனி மேரி, சாத்தூர் சதீஷ், போத்தனூர் சதீஷ், எழிலரசு, நிலா அறிவரசு, சின்னதுரை, இராஜலட்சுமி, பெரியார் பிஞ்சுகள் சித்தாபுதூர் கனல்விழி, பீளமேடு கனல்விழி, அறிவுக்கனல்.

**வடபுதூரில்** தந்தை பெரியாரின் 144 வது பிறந்த நாள் விழா இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தோழர்கள், வேலுச்சாமி-திமுக, கார்த்திக் -திமுக. செந்தில்குமார்-திவிக, ரங்கசாமி கலந்து கொண்டனர், மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம் முன்பு தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கோவை மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட தோழர்கள் அமுல்ராஜ் திவிக, திமுக நகர செயலாளர்-முனுசாமி, சிவ சுரேஷ் அரசு வழக்கறிஞர், ரமேஷ் குமார் வழக்கறிஞர், இரும்பொறை சுந்தரமூர்த்தி பகுத்தறிவாளர் கழகம், இங்கர்சால் திமுக வினோத்குமார், மகேஸ்வரன், கலைச்செல்வன், முகமது முபாரக், உமாநாத், இப்ராகிம் ரவி, மலர்மன்னன்,வேலு, ரங்கராசு பகுத்தறிவாளர் கழகம், குப்புசாமி பகுத்தறிவாளர்கள் கழகம்.

**சூலூர் ஒன்றியம் :** சூலூர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சூலூரில் பெரியார் 144வது நாள் விழா பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் அண்ணா சீரணி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது. கலந்து கொண்ட தோழமை அமைப்புகள் : திராவிட முன்னேற்ற கழகம், திராவிட இயக்க தமிழர் பேரவை, திராவிடர் விடுதலைக்கழகம், தந்தை பெரியார்திராவிடர்கழகம். பாவேந்தர் பேரவை. மார்க்சிய லெலினிய இளைஞர் அமைப்பு.

**கலங்கல் சாலை :** கலங்கல் சாலையில் கருப்பண்ணன் பிரதர்ஸ் லேஅவுட் பகுதில் பெரியார் 144வது பிறந்தநாள் நிகழ்வாக பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**அத்தப்பகவுண்டன் புதூர் :** சூலூர் ஒன்றியம் அத்தப்பகவுண்டன் புதூர் பகுதில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில பெரியார் 144வது அண்ணா 114வது பிறந்த நாள் விழா தோழர் தங்கராசு தலைமையில் நீலம்பூர் தங்கராசு முன்னிலையில் பெரியார், அண்ணா படங்களுக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**சின்னியம் பாளையம் :** சூலூர் ஒன்றியம் சின்னியம்பாளையம் பகுதியில் வழக்கறிஞர் சரவணன் தலைமையில் தலைமைக்குழு உறுப்பினர் பன்னீர் செல்வம், சிவா முன்னிலையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து உறுதி மொழி ஏற்று நிகழ்வாக நடைபெற்றது.

(3ஆம் பக்கம்)

## கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு சந்தாத் தொகையை முழுமையாக அனுப்பிடாத தோழர்கள் (முகவரிப் பட்டியலின்படி) உடனே சந்தா அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதேபோன்று கழக நூல்களுக்கான உரிய தொகையை அனுப்பாத தோழர்களும் உடனடியாக அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.

தயாரிப்பு செலவுகள் பல மடங்கு உயர்ந்து விட்டன. கடும் நெருக்கடியில் கழக ஏடு திணறிக் கொண்டிருக்கிறது என்பதைக் கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**– விடுதலை இராசேந்திரன், ஆசிரியர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th September 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN